# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 009 /2016

ஆணை எண்: 140 /2016

நாள்: 19 /08/2016

திரு.T.சத்தியமூர்த்தி, B.A.B.L.,
எண். 37, எடி.எஸ்.புரம், போலிஸ் லைன்,
மாரியம்மன் கோவில் எதிரில்,
திருப்பூர் – 641 601. – மனுதாரர்

செயல் அலுவலர்,
அவினாசி பேரூராட்சி,
திருப்பூர் மாவட்டம்–641 601. – எதிர் மனுதாரர்

திருப்பூர் மாவட்டம், அவினாசி பேரூராட்சியில் வசித்து வரும் திரு.T.சத்தியமூர்த்தி, B.A.B.L., அவர்களின் 20.04.2015 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறை மன்ற நடுவத்தில் பெறப்பட்டு 009/2015 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது:–

## ஆணை

திருப்பூர் மாவட்டம், அவினாசி பேரூராட்சியில் உள்ள திரு.T.சத்தியமூர்த்தி, B.A.B.L., என்பவரது 20.04.2015 நாளிட்ட முறையீட்டு மனுவில் மனுதாரர் கீழ்க்கண்டவாறான புகார்களை தெரிவித்துள்ளார்–

(i) அவினாசி தேர்வுநிலை பேரூராட்சியில் நவீன எரிவாயு தகன மேடை வேலை ஜெனரல் என்விரோடெக் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் ஒப்பந்தம் போடப்பட்டு 10.10.2012–ம் தேதியன்று வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும், வேலை ஆரம்பிக்கப்பட்ட தினத்தில் இருந்து 180 நாட்களுக்குள் முடித்துக் கொடுக்கவேண்டும் என்பது ஒப்பந்த சரத்துக்களில் ஒன்றாகும் எனவும், ஆனால் இரண்டு வருடம் ஆறு மாதங்கள் ஆகிய நிலையில் வேலைகள் முடிக்கப்படவில்லை என மனுதாரர் தெரிவித்து உள்ளார். மேலும், இந்த மின் மயான திட்டத்திற்கு ஒதுக்கிய நிதியான ரூ.53,11,040/– போதுமானது எனவும், இருப்பினும் பொது நிதியில் இருந்து இத்திட்டத்திற்கு ரூ.26,89,000/– வழங்கப்பட்டது எதற்காக தெரியவில்லை எனவும் மனுதாரர் தெரிவித்து உள்ளார்.

(ii) மின் மயான திட்டமானது தியான மண்டபத்தை உள்ளடக்கியது எனவும், ஆனால் தியான மண்டபம் கட்ட வேண்டும் என்ற நிலையில் பொது மக்களிடம் பொதுவாக அவினாசி பேரூராட்சி தலைவரால் ரூ.70 இலட்சம் மதிப்பிலான பொருட்களை வசூலித்தது தொடர்பான எந்த தகவலும் இல்லை என்று செயல் அலுவலர் தவறான பதில் அளிக்கிறார் என மனுதாரர் தெரிவித்துள்ளார். எனவே, இத்தகைய செயல்பாடுகளுக்கு உடந்தையாக இருந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் மேற்படி மின் மயான திட்டத்தை எவ்வித காலதாமதம் இன்றி கட்டி முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் மனுதாரர் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மனுதாரரின் முறையீடு தொடர்பாக அவினாசி பேரூராட்சி செயல் அலுவலரிடம் விளக்க அறிக்கை கோரப்பட்டது. செயல் அலுவலர் தனது 09.07.2016 நாளிட்ட விளக்க அறிக்கையில் தெரிவித்துள்ள விவரம் பின்வருமாறு:–

(i) அவினாசி பேரூராட்சியில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்க சமன்பாட்டு நிதி ரூ.53,11,040–ம், பொது நிதி ரூ.26,88,960–ம் மொத்தம் ரூ.80 இலட்சத்திற்கு பேரூராட்சி இயக்குநர் அவர்களின் 04.01.2012 –ம் தேதியிட்ட நடவடிக்கைகள் வாயிலாக நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் அவ்வாறே முறையாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு மன்ற ஒப்புதல் பெறப்பட்ட பிறகு வேலை உத்தரவு வழங்கப்பட்டது என செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

(ii) ஒப்பந்த காலமான 180 நாட்களுக்குள் பணி முடிக்கவில்லை என்பதற்கு செயல் அலுவலர் தனது விளக்க அறிக்கையில் பணி தொடங்க தேர்வு செய்யப்பட்ட இடம் ஏற்கனவே பல ஆண்டுகளாக மயானமாக இருந்து சுடுகாடாகவும், இடுகாடாகவும் பயன்பட்டுவருவதால் அதில் ஏற்கனவே கட்டப்பட்டிருந்த சமாதிகளை இடித்து அப்புறப்படுத்த ஆட்சேபம் தெரிவித்ததால் பேரூராட்சியின் சார்பில் சமாதிகளை அப்புறப்படுத்த காலதாமதம் ஆகி விட்டது என செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

(iii) மனுதாரர் இதே புகாரினை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புத்துறைக்கு அனுப்பப்பட்டதன் பேரில் திருப்பூர் மாவட்ட ஆட்சியரின் 25.05.2015 நாளிட்ட கடிதத்தின் படி புகார் மனு மீதான விசாரணை ஈரோடு மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநரால் தொடர்புடைய கோப்புகள் மற்றும் ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு செயல் அலுவலர் மற்றும் பிற அலுவலர் அளித்த எழுத்துப் பூர்வமான வாக்குமூலங்களின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் 07.01.2016 நாளிட்ட விசாரணைஅறிக்கையில் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.:–

> "அரசு மான்யம் மற்றும் பேரூராட்சி பொது நிதியில் அமைக்கப்பட்ட எரிவாயு தகனமேடை அமைக்கும் பணியில் எவ்வித முறைகேடும் நடைறெவில்லை என்பதையும், பேரூராட்சிகள் இயக்குநர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட இப்பணி அவிநாசி பேரூராட்சி தொகுப்பு உதவிப் பொறியாளரால் அளவுகள் மேற்கொள்ளப்பட்டு, திருப்பூர் மாவட்ட பேரூராட்சிகள் உதவி செயற்பொறியாளரால் மேற்பார்வை செய்யப்பட்டு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக முதன்மைப் பொறியாளர் அவர்களால் மேலொப்பம் செய்யப்பட்டு இறுதிப் பட்டியல் தொகை சம்பந்தப்பட்ட ஒப்பந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது"

(iv) தற்போது 28.09.2015 முதல் இம்மயானம் பொது மக்களின் பயன்பாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்டு முழுமையாக பயன்பட்டு வருகிறது எனவும் இப்பணிக்கான மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்ட அளவிற்கு முழுமையாக கட்டி முடிக்கப்பட்டு அரசு மானியம் மற்றும் பொது நிதி முழுவதுமாக பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும் செயல் அலுவலர் தனது விளக்க அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும், அவினாசி பேரூராட்சி பொதுமக்கள் வேண்டுகோளின்படி இப்பேரூராட்சி மன்றத் தலைவர் அவர்களால் கட்டுமானப் பொருட்கள் மட்டும் நன்கொடையாகப் பெறப்பட்டு கூடுதலான தியான மண்டபம் கட்டியுள்ளார் எனவும், மேற்காணும் கட்டுமானப் பொருட்கள் நன்கொடையாகப் பெற்றமைக்கு நன்றி தெரிவித்து பேரூராட்சி மன்றத் தலைவர் அவர்களால் விளம்பரப் பலகை வைக்கப்பட்டது என்பதையும், நன்கொடையாளர் அனைவருக்கும் நன்றி தெரிவித்து தீர்மான எண்.137/2015 நாள்.05.06.2015–ன் படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது எனவும் அதில் பேரூராட்சி செயல் அலுவலரோ, பணியாளர்களோ ஈடுபடவில்லை எனவும் தகன மேடையைச் சுற்றி அமைந்த மண் (Clay) களிமண்ணால் ஆனது என்பதால், அமரர் ஊர்தி செல்லவும் பொதுமக்கள் தகன மேடையை சென்றடையவும் ஏதுவாக நல்லாற்றின் கரையில் அமைந்த பகுதி என்பதால் மழைக்காலம் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு கருதியும் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் தகன மேடையைச் சுற்றி சிமெண்ட் கற்களால் ஆன (Paver Block) சாலை அமைக்க ஈரோடு மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர் உத்தரவு ந.க.எண்.58/2015/ப1, நாள்.16.03.2015–ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு, திருப்பூர் மாவட்ட பேரூராட்சிகள் உதவி செயற் பொறியாளரால் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, பணி முடிவடைந்துள்ளது என்பதையும் புகாரில் மனுதாரர் தெரிவித்துள்ள படி மேற்காணும் தொகை ரூ.20 லட்சம் எரிவாயு தகனமேடைக்கு பயன்படுத்தப்படவில்லை என்றும், மனுதாரர் தனது மனுவில் திட்ட மதிப்பீட்டில் கட்டப்பட்ட நவீன எரிவாயு மயானம் அமைக்கும் பணியுடன் பொது மக்கள் பங்களிப்பால் கட்டப்பட்டுள்ள தியான மண்டபத்தையும் ஒன்றாக நினைத்து, பல்வேறு ஊர்களில் வெவ்வேறு காலகட்டத்தில் உள்ள விலைவிகிதத்தில் கட்டப்பட்ட எரிவாயு மயானம் மற்றும் அந்திமக் கிரியைகள் செய்யும் இடத்தை மட்டும் கருத்தில் கொண்டு குறிப்பிட்டுள்ள புகார்கள் அனைத்தும் உண்மைக்கு மாறானவை எனவும் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

3. மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தின் முன் 29.04.2016 மற்றும் 05.07.2016 ஆகிய இரு நாட்களில் விசாரணைக்கு ஆஜராகுமாறு ஆணையிடப்பட்டது. ஆனால் மனுதாரர் தனது புகார் மனு மீதான விசாரணைக்கு ஆஜராகவில்லை.

4. 11.07.2016 அன்று நடைபெற்ற விசாரணையின்போது செயல் அலுவலர் கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்.

> "எனக்கு முன்பு பணிபுரிந்த திரு.மணிச்சாமி (ஓய்வு பெற்ற செயல் அலுவலர்) அவர்களால் இந்த பணிகள் செய்யப்பட்டன. மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள தியான மண்டபம் பொது மக்களிடமிருந்து ரூ.70 லட்சம் மதிப்புள்ள செங்கல், மணல் மற்றும் ஜல்லி பெற்றதை வைத்து கட்டப்பட்டுள்ளது. அதனுடைய போட்டோ இத்துடன் சமர்ப்பிக்கிறேன். அந்தப் பணத்தை வைத்து மின்மயான திட்டம் செயல்படுத்தப்படவில்லை. திட்ட மதிப்பீட்டில் மின்மயான திட்டம் என்பது தனியாகவும், தியான மண்டபம் என்பது பொது மக்களின் பங்களிப்பாகவும் செய்து முடிக்கப்பட்டுள்ளது. மின் மயான எரிவாயு தகன மேடை தனியே ஒப்பந்தம் போடப்பட்டு, பணி முடிக்கப்பட்டது. எரிதகனமேடை, திட்ட வரைப்படம், மதிப்பீடு இத்துடன் சமர்ப்பிக்கிறேன். இதில் அளவீடு, மேல்அளவீடு, அனைத்தும் உரிய அலுவலர்களால் தயாரிக்கப்பட்டு மேல் அளவீடு செய்யப்பட்டு பணி முடிக்கப்பட்டது. உள்ளாட்சி நிதி தணிக்கை குழுவினராலும் இந்த பணி குறித்து குறைபாடுகள் ஏதும் சொல்லப்படவில்லை. மனுவில் குறிப்பிட்டுள்ளஅனைத்தும் தவறான தகவல்கள்."

5. மேற்கூறிய சூழ்நிலையில் முறையீட்டு மனுதாரரின் புகார் மனு குறித்து மாவட்ட ஆட்சியரின் விசாரணை அறிக்கை, செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் செயல் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவைகள் பரிசீலிக்கப்பட்டதன் அடிப்படையிலும், மேலும் மனுதாரர் இம்முறை மன்ற நடுவத்தின் முன் விசாரணைக்கு ஆஜராகாததன் அடிப்படையிலும் புகார் மனு ஆதாரமற்றதாகவும் மற்றும் உண்மைக்கு புறம்பானதாகவும் உள்ளது என இம்முறைமன்றத்தால் முடிவெடுக்கப்பட்டு அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2016-ஆம் ஆகஸ்டு திங்கள் 19–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

ஓம்/...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர் (பொறுப்பு)

பெறுநர்:
1. திரு.T.சத்தியமூர்த்தி, B.A.B.L.,
எண். 37, எடி.எஸ்.புரம், போலிஸ் லைன்,
மாரியம்மன் கோவில் எதிரில்,
திருப்பூர் – 641 601.
2. செயல் அலுவலர்,
அவினாசி பேரூராட்சி,
திருப்பூர் மாவட்டம்–641 601.